ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

நாஸ்திகன்:— அரிய செய்கைகளைக்கொண்டு நம் முன்னோர்களை மகான்களாக எண்ணவேண்டும், அத்தகைய காரியங்களொன்றாவது தற்காலத்தில் காணவில்லை. ஆகவே அத்தகைய அபூர்வவஸ்து யாதொன்றையும் நம் முன்னோர்கள் செய்திருப்பதாக நம்புவதற்கு இடமில்லை. ஏதோ அபூர்வ காரியங்களைச் செய்திருப்பதாகத் தங்களிடமிருந்துதான் கேள்விப்படவேண்டியிருக்கின்றது.

ஆஸ்திகன்:— கேள்வி மூலமாகத்தான் முன்னோர்களிடம் முதலில் நம்பிக்கை ஏற்படவேண்டும். இதற்காகத்தான் சிரவணத்தை முதன்மையாகச் சாஸ்திரங் கூறுகின்றது. இவ்வுலகிலுள்ள விஷயங்களை எல்லாம் பிரத்தியக்ஷம் ஒன்றாலேயே அறிந்துகொள்ளக் கூடுமா? நமக்குத் “தாய்த்தந்தை யார்” என்பதைச் சப்தப்பிரமாணத்தாலன்றி வேறொன்றாலும் அறிய இயலாதல்லவா? அப்படியே பெற்றோர்களைப்போல் முன்னோர்களையும், அவர்களின் காரியங்களையும் அவச்யம் அங்கீகரிக்கத்தான்வேண்டும். நம்மைக்காட்டிலும், நம் முன்னோர்களுக்கு அனாயஸமாக அனேக அத்புத காரியங்களை அரைநொடியில் ஸிருஷ்டிக்க வல்லமை உண்டென்பது பிரத்தியக்ஷஸித்தமே. தற்காலத்தில் ஜனங்களுக்கு எல்லாவிதத்திலும் பலக்குறைவு ஏற்பட்டிருப்பது அனுபவஸித்தமே. முன்னூற்றாண்டுகளிலு மிவ்விதமே ஜனங்களுக்கு வலிமை குன்றியிருந்ததாக ஒப்புக்கொள்வது உசிதமில்லை.

நா:— முன்னோர்களுக்கு பலம் அதிகமென்றால், மூடர்களென்று சொல்வதில் என்ன ஆக்ஷேபம், சௌர்யமுள்ளவர்களுக்கு மௌட்யமும் உடன் பிறந்ததன்றோ?

ஆ:— பேஷ், இனி உண்டாகின்றவர்களைக் காட்டிலும் தங்களுக்கும் மௌட்யமதிகமென்று ஏன் சொல்லக்கூடாது ? ஆகவே சாஸ்திர விசாரத்திலுனக்கு அதிகாரம் சிறிதுமின்றாம்.

நா:— வாஸ்தவம் தான். சாஸ்திரத்தில் நம்பிக்கை எங்களுக்கில்லாமையால் விசாரம் அனாவச்யமே.

ஆ:— ஆனால் நீ சாஸ்திராதிகாரி இல்லையா ?

நா,— இல்லைதான்.

ஆ — அங்ஙனமாயின் நீ மிருகம் தான். உன்னைக்கட்டி வைத்து நீதிபதிகளைக் கொண்டு உதைக்க வேண்டியது தான் ?

(தொடரும்)

V. J. S.

ஆர்யதர்மம்.

ஆங்கிரஸ-ஹூ புரட்டாசிமீ ௨௧௨

உயர்வு தாழ்வு வாத ஸமரசம்.

பகவானுடைய அபரிமித சக்தி விசேஷத்தால் ஸிருஷ்டிக் கப்பட்ட ஜீவராசிகளில் எண்ணிறந்த வித்தியாஸமுண்டு. அவை யாவும் வாயால் வர்ணிக்கப்படவும் கையால் எழுதவும் முடியா தென்பது யாவருமறிந்தவிஷயம். இவ்விதம் அதிக விசித்திரமாயும், விலக்ஷணமாயும், விவிதமாயுமுள்ள பிரபஞ்சத்தின் வேற்றுமைத் தோற்றமெல்லாம் பகவானுடைய ஸிருஷ்டிக்கிரமப் பிராப்தமேயன்றி மற்றொருகாலத்தால் பிராப்தமன்று, பகவானுடைய ஸிருஷ்டிக்கிரமமெல்லாம் "ஸத்வராஜஸ்தமஸ்" என்ற முக்குண மூலமாதலின் விஷமஸ்வபாவமாகவே அமையப்பெற்றிருக்கின்றது. ஒரு வஸ்து மற்றொரு வஸ்துவாக மாறிவிடுவதோ, மாறினதாகத் தோற்றுவதோ தான் ஸிருஷ்டி சப்தார்த்தமாகும். ஆகவே பகவானுடைய விஷம ஸிருஷ்டி கிரமத்தின் பிரகிருதியை மீறுவதற்கும், அதனை அழித்து விடுவதற்கும் யத்தினம் எடுத்துக் கொள்வது மிக எளனமேயன்றி பூஷணமன்று. இவ் விஷம ஸிருஷ்டியையும் பகவான்தான் ஸ்வயமாகவே அவலம்பிக்கவில்லை. அது அனுதிகர்மானுஸாரமாக அவருக்கு அமைந்திருக்கின்றது.

இவ்வாறிருக்க இதனை ஸமப்படுத்திவிடுவதற்குத் தற்காலத்தியவர் பலர் முயன்றுவருகிறார்கள். இதனால் பிரகிருதியின் ஸ்வபாவத்தை மீறமுடியாதென்பதை இவர் உணரவே இல்லை என்பதில் ஸந்தேகமில்லை. இதனால்த்தான் நம் நன்னாட்டில் சில நாட்களாக அனேக கலகங்களும், குழப்பங்களும், அனர்த்தங்களும் உண்டாய்க்கொண்டேவருகின்றன. இதுதான் நமது நாட்டில் பரஸ்பரஸ்னேகத்துடன் ஸுகமாக வாழ்ந்துவந்த பாரத மக்களுள் ஏற்றத்தாழ்வு மதாபிவிருத்திக்கு ஒரு தூண்டுகோலாக ஏற்பட்டுவிட்டது. ஒற்றுமையை அழித்ததுமன்றி வேற்று

ஸமபாவனையையும் அதிகரிக்கச்செய்தது இதன் சக்தி விசேஷந் தான். இவ் வுண்மையையறியும் சக்திவாய்ந்தவரோ தற்காலத்தில் வெகு அற்பமாய்விட்டதென்றால் ஜீவராசிகளின் அவிவேகாபி விருத்தியின் அளவை என்னென்று வாயால் வர்ணிப்பது. புத்திரன், தாய் தந்தையரிடத்தில் ஸமபாவனைகூட செய்யமுடியுமா? அதுபோல் தாழ்ந்தவரிடத்தில் தனக்கு ஸமமென்ற பாவனையும் ஏற்கக்கூடியதல்ல. அவர்களிடம் நியாயப்ரகாரமாக பக்தி விசுவாசம் பாராட்டவேண்டுமென்ற விஷயம் ஹிந்துக்களெல்லோருக்கும் ஸம்மதமேயாகும்.

இதை எந்த ஹிந்துவாவது மறுத்துக் கண்டனம்புரிந்தால் அவர் குற்றவாளிதான் என்பதில் ஆக்ஷேபமில்லை.

ராஜீய தந்திரமா?

இதன்றி பிற நாட்டினரை ஸ்வ வசப்படுத்திக்கொள்வதன் பொருட்டு பூர்விக நியாயமரியாதைக்கிரமங்களையெல்லாம் மீறி ஸகோதர வாத்ஸல்யத்துடன் வாழ்ந்துவருகின்ற ஸ்வயநாட்டினரிடம் உட் கலகங்களை அதிகரிக்கச்செய்வதாகிய உபதேசம் உசிதமென்று எப்படி அங்கீகரிப்பது. அவ்வித உபதேசத்திற்கு ஏதாவது பயனுண்டோவென்று கவனித்தால் அது அணுவளவுங் கிடையாது. அவ் வுபதேசகரின் ராஜீய தந்திரமென்றுமிதனை ஏற்கமுடியவில்லை. ஆனால் அரசாங்கத்தாருக்கு இது ராஜீய தந்திரந்தான் என்பதில் ஆக்ஷேபமில்லை.

"वाराङ्गनेव नृपनीतिरनेकरूपा"

என்றல்லவர் பர்த்ருஹரிமகாராஜன் என்பவன் கூறியிருக்கிறான். நீதி சாஸ்திரம், அர்த்தசாஸ்திரம் முதலிய நூல்களில் கூறியுள்ள அரசாங்க முறையை அறிந்தாலல்லவா, மந்திரவாயிலாக தந்திரத்தைப் பிரயோகிக்கவேண்டும். தாழ்ந்த வகுப்பினரை உயர்த்திவிடவேண்டுமென்ற விஷயத்தில் மந்திரமும் இல்லை தந்திரமும் தேவையில்லை. இதனால் சுய அரசாக்ஷி கிடைத்துவிடும்பக்ஷத்தில் அதன்போக்கு எவ்விதமிருக்குமென்பது திடமாய்ப் பிரகாசித்துவிட்டது. தாழ்ந்த வகுப்பினரை உயர்த்த வழி பார்ப்பதானது உயர்வாகக் கருதியுள்ள வகுப்பினரை இழிவுபடுத்தினதாக ஏற்பட்டுவிட்டது. யாவரும் உயர்வாகவோ, அல்லது இழிவாகவோ இருந்துவிடுவது எப்படி ஸாத்தியமாகும் என்பது புரியவில்லை.

சிலர் உயர்வாகவும், சிலர் தாழ்வாகவும் தான் இவ்வுலகில் வாழ முடியும். எந்த மதத்தில் தான், எந்த தேசத்தில் தான், எந்த மனிதரிடத்தில் தான், உயர்வு தாழ்வு வாதம்வஸிக்கவில்லை. கிறிஸ்துவர்களுக்குள்ளும் உயர்வு தாழ்வு வாத முழக்கம்மும்மாந்தான் என்பது மறக்கத்தக்கதல்ல.

தன்னைத் தவிர வேறொரு வஸ்து தோன்றும் வரையிலும் அவற்றில் உயர்வு தாழ்வு பாவனை ஏற்பட்டே தீரும். பாஹ்ய வஸ்துத் தோற்றத்தை நசிக்கும்படி செய்ய சாமர்த்தியம் பெற்ருல் உடனே உயர்வு தாழ்வு வாதமும் ஒழிந்துவிடும். இந்த சாமர்த்தியம் பெற்றவருங்கூட உயர்வு தாழ்வு வாதத்தை "நான் அகற்றிக்கொண்டு விட்டேன். நீங்களும் அகற்றிவிடுங்கள்" என்று மற்றவருக்கு உபதேசஞ் செய்ய முன்வரமாட்டார்கள். அப்படி உபதேசிப்பவர் தாம் ஸமத்துவநிலையடையாதவரேயன்றி அடைந்தவரென்று நிச்சயமாய் சொல்லவே முடியாது.

தேவாலயப்ரவேசம்

தேவாலயங்களில் தாழ்ந்த வகுப்பினர் பிரவேசிக்கவேண்டுமென்ற பிடிவாதத்தாலும், உள்சண்டை தான் அதிகரிக்கும். தாழ்ந்த வகுப்பினருக்கு ஏராள பணச் சிலவு செய்து தனியாக சிவன், விஷ்ணு, மகம்மாயி, மாரி முதலிய தேவர்களின் ஆலயத்தைக் கட்டிக்கொடுப்பதில் ஆக்ஷேபமில்லை. இதன்றி மேலோருடைய கோவில்கள் தான் எங்களுக்கு வேண்டுமென்ருல் மற்றவர் அவர்களால் அக்ரமமாக ஆக்கிரமிக்கப்பட்ட ஆலயங்களில் பிரவேசிக்காமலிருக்க நேரிடும். அப்படியானுல் ஒற்றுமை என்ற பிரயோஜனம் எங்ஙனம் ஸித்திக்கும் என்று தலைவர் யோஜிக்க வேண்டுமல்லவா? ஆகையால் ஆர்யர்களே! இவ்விஷயத்தை சற்று நிதானியுங்கள். வழக்கத்திற்கும் பிரகிருத நியமத்திற்கும் விருத்தமாக பிரவிருத்தியாதீர்கள். அப்படியானுல் ஸமரஸம் ஒரு போதும் ஸித்திக்கமாட்டாதென்பது நிச்சயம். இதில் என்ஞல் கூறப்பட்ட விஷயங்களைத் தீர்க்காலோசனை செய்து ஒரு ஸமரஸ முடிவுபெறும்படி பகவான் அருள்புரிவாராக. சுபம்!

V. ஜகதீசுவர சாஸ்திரிகள்

மதம்.

(R. நடராஜன் எழுதியது.)

கடவுளின் சட்டமும் அவதார புருஷர்களின் சீர்திருத்தங்களும் தேவதூதர்கள் பாமார்த்திகத் தன்மையில் உயர் பதவி அடைந்த பெரியோர்கள் இவர்களது வெளியீடுகளும் மதம் என்ற பெயரால் வழங்கப்படுகிறது. உலகில் பல ஜீவர்களிடையே அமைதியை நிலைநிறுத்திப் பிரபஞ்சத்தை நடைபெறச்செய்யவும், அல்லற்படும் ஜீவராசிகளை பரிபூர்ண சுதந்திரத்தையும், அபரிமிதமான ஆனந்தத்தையும் அனுபவிக்கச்செய்யவும் மதம் மூலாதாரமாக இருக்கிறது.

தனிப்பட்ட ஒருவரது அபிப்பிராயம், இச்சை, பிரவிர்த்தி இவற்றிற்கும் சமூகம், தேசம், உலகம், அகில பிரபஞ்சங்கள், இவைகளின் போக்குகளுக்கும் சட்டங்கள் இருக்கவேண்டியது தவிர்க்க முடியாததாகும். ஒருவனது சட்ட திட்டங்களுக்குட்படாத சுயேச்சையான அபிப்ராயமும், செய்கையும் ஒருபேருக்கு அல்லது அநேகருக்குக் கஷ்டத்தை விளைவிப்பதானுலும், அல்லது முற்றிலும் தூய்மையானதாக அவனுக்குத் தோன்றிவிட்டாலும்மாத்திரம் அவனுடைய பிரவர்த்தி களங்கமற்றதாயும் பரிசுத்தமானதாயும் ஆகிவிடாது. இவ்வாறே படிப்படியாக சமூஹம் தேசம் முதலியவைகளின் நடவடிக்கைமுறைகளும் கருதப்படவேண்டும். ஆனால் ஒருவிதமான கட்டுக்கும் உட்படாத மனிதர்களுடைய செய்கைகளால் ஏற்படும் தொல்லைகளைவிட கட்டுள்ள சமூஹம் தேசம், உலகம் என்ற பரந்தநோக்கத்துடன் தூய்மையானதாகக் கருதப்பட்டு செய்யப்படும் காரியங்களில் கஷ்டங்கள் குறைவாகவே இருந்துவருகின்றன. எனவே சகல பிரபஞ்சங்களிலும் முற்றிலும் கஷ்டங்களை விலக்கக்கூடியதாயும், அமைதியை நிலைநாட்டக்கூடியதாயுமுள்ள சட்டமே தனிப்பட்ட கேவலமான ஜீவராசிமுதல் தேசம் உலகங்கள் யாவுமே உய்விக்க உபயோகப்படும். அவ்வாறன்றி தனிமனிதன் ஒவ்வொரு சமூஹம், தேசம், முதலியன முறையே சமானமான பிறவற்றின் சுகவாழ்வில் நோக்கமில்லாது தன்னல முயற்சியுடன் சட்டங்களைச் செய்து புத்தகங்களை குவித்துக்கொண்டிருப்பதாலும், அல்லது அவைகளை அமுக்கிக் கொண்டுவருவதற்காக தீவிரமான முறைகளைக் கையாள்வதாலும்,

தேசத்தின் குறைகளையோ தனி மனிதரின் கஷ்டங்களையோ குறைத்துவிடமுடியாது.

ஆகவே ஸகல உலகங்களுக்கும் கஷ்டமின்றி நாமும் சுகமடைய கையாளப்படும் முறையே முற்றிலும் சிறந்ததாயும், எக்காலும் மறையாமல் நிரந்தரமானதாயும் சந்துஷ்டியை அதிகப்படுத்துவதாயுமிருக்கும். ஆகையால் தனிமனிதன் தேசம் மதம் இத்தகைய பிரச்னைகள் ஏற்படுமிடத்து, சமூஹத்திற்காகத் தன்னலத்தையும், தேசத்திற்காக வகுப்புவாதங்களையும், மதத்திற்காகத் தேசிய அபிப்பிராயத்தையும் விரோதமேற்படுங்கால் விட்டுக்கொடுத்து கொள்கைகளை மாற்றிக்கொள்ளவேண்டியவனும், மதக் கட்டளைகளுக்குப் பூர்ண கௌரவம் கொடுக்கவேண்டியவனுயுமிருக்கிறான்.

மதங்களுள் பிரபலமானவை ஹிந்துமதம், கிருஸ்தவ மதம், பௌத்த மதம், மஹம்மதிய மதம் முதலியவை. இவைகளில் பல கிளைப் பிரிவுகளும், சில கலப்புமதங்களும் உண்டு. கிருஸ்தவ மதத்தைச்சார்ந்த கத்தோலிக் ப்ராடஸ்டெண்டு கிளைமதங்களும் ஹிந்துமதத்தைச் சேர்ந்ததாகச்சிலரால் சொல்லிக்கொள்ளப்படும் ஆர்ய ஸமாஜம் பிரம்ம ஸமாஜம் முதலிய கலப்பு மதங்களும் உதாரணமாக கூறப்படலாம். இத்தகைய கிளைப்பிரிவுகளும் கலப்புத் தொகுதிகளும் பிற்காலத்தவரால் வகுத்துக்கொள்ளப்பட்டவை.

வர்ணாசிரம தர்மமாகிய ஸனாதன மதம் ஸகல பிரபஞ்சங்களுக்கும் ஸமானமாய் முற் பிறவி பின் பிறவி தொடர்புள்ளதாய் ஸஞ்சிதம், பிராரப்தம், ஆகாமி மூவகைக் கர்மாக்கள் ஸம்பந்தம் பெற்று, காலத்தைப்போல் ஆதியற்றதாய் அழிக்கமுடியாததாய் என்றும் பிரகாசிப்பதாய்ப் பரிபூரணசுதந்தரமாகிய அத்வைதாத்ம ஸாக்ஷாத்கார அறிவுரூபமான ஆனந்த நிலையை பரமநோக்கமாகக் கொண்டது. இந்த முறைதான் பிரபஞ்ச ஓட்டத்தில் குறைந்த பக்ஷமான கஷ்டங்களுடன் மேல் நிலைக்குக் கொண்டுவா உதவுவதாகும். எவ்வளவுக் கெவ்வளவு நாம் இம்முறையை அந்தக்கரண சுத்தியாக நேர்மையாக அனுஷ்டிக்க முற்படுகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நமக்கும் பிரபஞ்சங்களுக்குமே உயர்நிலை ஏற்படும். பிரபஞ்சங்களின் ஜீவராசிகள் ஒரேகாலத்தில் உயர்ந்த பக்ஷமான

சந்தோஷத்தை அடைய வேண்டுமாயின், இதற்கு பாதகமேற்படாவகையில் தங்கள் வாழ்க்கையைச் சீர்திருத்திக் கொள்ள முற்படவேண்டும்.

இம் மதம் தற்காலத்தியவரால் ஹிந்துமதமென வழங்கப்படுகிறது. நவீன ஆராய்ச்சிக்காரர்களால் ஹிந்து என்ற பெயர் கொடுக்கப்பட்டபோதிலும் அவர்களது அபிப்பிராயங்களை நாம் ஆராயுங்கால் அது சிறந்ததாகக் காணப்படவில்லை. நமது மதம் குறிப்பிட்ட தேசம் உலகம் இதில் பிரகாசமுள்ளதென்றும் தனி மனிதர் அல்லது தெய்விக வ்யக்தியால் ஏற்படுத்தப்பட்டதென்றுவது சொல்லமுடியாததால் மனிதருடைய பெயரைக்கொண்டோ தேசத்தின் பெயரைக்கொண்டோ வ்யவஹரிப்பது பொருத்தமற்றதாகும்.

மதத்தை விளக்கும் முக்யபாகங்களாகிய வேதங்கள் உபநிஷத்துகள், இதிஹாசங்கள் இவை ஏதாவது ஓர் காலத்தில் யாராலாவது உண்டுபண்ணப்பட்டுத்தான் இருக்கவேண்டும். எனவே அனாதித்தன்மை பொருத்தமற்றது எனில் அதிசரியன்று. வேத தர்மங்கள் குறைவுபட்டகாலத்தில் கடவுள் அல்லது அவரது பிரதிநிதியால் அவைகள் முன்னிலும் அதிகமாக பிரகாசத்திற்குக் கொண்டுவரப்பட்டன என்பதே அதன் பொருள். கோடிக் கணக்கான வருஷங்களுக்கு முன்னும் பின்னும்கூட காலம் தொடர்புள்ளதாயிருப்பதால் ஆதியந்தமில்லாத கால சக்ரத்தில் நடந்த அல்லது நடந்ததாகவேண்டியதும் நடக்கின்றனவுமான பல நிகழ்ச்சிகளே கதாரூபமாக மதநூல்களில் வெளியிடப்பட்டிருக்கின்றன. மற்றும் சில அர்த்தவாதமுறையில் தத்வத்தை உபதேசிக்கும் ஸந்தர்ப்பத்தில் ஸௌகர்யார்த்தமாக ஸ்வீகரிக்கப்பட்டிருக்கின்றன. இதன்மூலம் குறிப்பிட்ட சரித்திர வரலாறுகள் நடந்தபிற்பாடுதான் ஸனாதன மதம் அல்லது அதன் ஓர் பாகம் புதிதாக ஏற்பட்டதென்றுவது, தர்மங்கள் கலியில் ஒழியும் என்றதால் நமது மதம் அந்த ஸமயத்துடன் நாசத்தை அடையும் என்றுவது பொருள்கொள்வது ஸரியன்று. தர்மங்கள் ஒழியும் என்று சொல்லப்பட்டிருப்பதைக்கொண்டு கலியில் அனுபவித்துப் பிறகு எழுதப்பட்டது என்று கொள்வதற்கும் இடமில்லை. ஆனால் கலியில் தர்மங்கள் குறையும் என்ற அபிப்பிராயந்தான் பொருளாகக்

கொள்ளப்படலாம் சப்தம், நித்யம் என்பது நமது கொள்கை யாதலின் காலசக்கரத்தினுடைய பல நிகழ்ச்சிகள் சப்தவாயிலாக பிரகாசிப்பது முறண்பட்டதாக ஆகாது.

நமது மதத்தின் நோக்கம் பூர்ண அறிவு, பூர்ண சுதந்த்ரம், பூர்ண சுகம் இவைகளை ஜீவராசிகள் அடையும்படிசெய்வதே. ஜட சரீரத்தைக்காட்டிலும் வேறாக ஆத்மா ஒன்று உளது என்பதும், அநித்யமான பிரபஞ்சவாழ்க்கையில் மோஹமடைந்து நித்ய சுகத்தை விடுதல் சரியல்ல வென்பதும், நான் ப்ரம்மம் என்ற பூர்ணத்தன்மையை அடைய ஜீவர்கள் முயற்ச்சிக்க வேண்டுமென்பதும் மதக்கோட்பாடுகள் அஹிம்ஸை அன்பு ஸத்யம் பரோபகாரம் இவைகள் முக்கிய ஸாதனங்கள் மற்றும் பாரமாத்திகமான உயர்வைப்பெறுவதற்கான யோகமார்க்கங்களும் அநுஷ்டானமுறைகளும்பல உள. ஒருக்கால் பூர்ணவிடுதலையிலும் சுகத்திலும்இச்சையற்று சிறிது துக்கத்தோடு கூடவே அதிகமான சந்தோஷத்தையும் அனுபவிக்கவேண்டுமென்ற அபிருசியிருந்தால் அத்தகைய வாழ்க்கையை நடத்துவதற்கும் வேத தர்மானுஷ்டானங்களே மேலானவைகள். அநித்யங்களாயும் ஜடங்களாயுமுள்ள சரீரங்களின் அபரிமிதமான எண்ணிக்கையை மதத்திற்குப் பலமாக கருதாமையும் ஹிந்துமதத்திலிருந்து வேறு மதங்களைத் தழுவினவர்களையும் மததர்மங்களை எல்லாவகையாலும் முற்றிலும் துறந்தவர்களையும் இம்மதத்திலேயே இறுத்திவைக்க முயற்சி செய்யாமையும், பிற மதத்தினர்களை மதமாற்றம் செய்ய முற்படாமையுமாகிய இவைகள் முக்யமாகக் குறிப்பிடத்தக்கவைகள்.

(மதம், நாகரிகம், கலை, தர்மம் இவை சம்பந்தமாகப் பல கட்டுரைகள் தொடர்பாக வெளியிடப்படுமாதலின் "ஆர்யதர்மம்" என்ற பெயருடன் பத்திரிகாநேயர்கள் பொதுஜனோபகாரமாகத் தங்கள் பத்திரிகைகளில் பிரசுரித்துக் கொள்ளலாம்.)

அஸ்ப்ருச்யர்களின் ஆலய ப்ரவேசம்.

ஸந்தேஹிக்கும் வைதிகருக்கும் ஸம்வாதம்.

ஸந்தேஹியின் கேள்வி:— அஸ்ப்ருச்யர்கள் ஆலயங்களில் பிரவேசிக்க வைதிக மதஸ்தர்கள் அனுமதிக்க வேண்டுமென்று மகாத்மா காந்தி ஆக்ஞையிடுகிறாரே, அவ்விதம் செய்ய வேண்டாமா?

வைதிகரின் பதில்:— அதற்கு ப்ரமாணமில்லையே.

ஸ:— காந்தி சொல்வதே ப்ரமாணம்.

வை:— அது ப்ரமாணமாகாது.

ஸ:— வேறு எது ப்ரமாணம்?

வை:— ப்ரத்யக்ஷம், அனுமானம், சாஸ்திரம், சிஷ்டாசாரம்.

ஸ:— இந்த விஷயத்தில்?

வை:— சாஸ்த்ரம், சிஷ்டாசாரம்.

ஸ:— என்றால்?

வை:— வேதம், ஸ்மிருதிகள், ஆகமங்கள்; அவைகளை அறிந்தவரின் ஆசாரணை.

ஸ:— வேதத்தில் இதைப்பற்றி பேச்சு இருக்கிறதா?

வை:—ப்ரஹதாரண்யக உபநிஷத்தில்(ப்ரதமாத்யாயம்,மூன்ருவது ப்ராஹ்மணம்—10. க.) ப்ராணதேவதையானது, பாபங்களை தூரமாய் ஒதுங்கின ப்ரதேசத்தில், அந்த்ய ஜனங்களினிடத்தில் போட்டுவைத்ததென்றும், அவ்வித ஜனத்தை நெருங்கலாகாதென்றும், அவர் வஸிக்கும் ஸ்தலத்தில் போகலாகாதென்றும் சொல்லியிருக்கிறது.

ஸ:— அந்த்யஜனன் என்றால் யார்?

வை:— நான்கு வருணத்துக் கப்பாலுள்ள கடைகி ஜாதி.

ஸ:— இங்கே வேதவாக்யத்தால் நேரே ஸித்திக்கிறது எது?

வை:— பாபமுள்ள ஜனங்கள் ஒரு கூட்டம் உண்டென்றும், அவர் ஒதுங்கிவஸிக்கும் ஸ்தலமுண்டென்றும், அவரிடமும், அவர் ஸ்தலத்திலும் மற்றவர் நெருங்கலாகாதென்றும் அவர் வஸிக்கும் ஸ்தலத்தில் போலாகாதென்றும் தோன்றுகிறது.

ஸ்ங்:— வேதத்தில் "சண்டாளஜாதி" என்ற பேச்சு உண்டா?

வை:— சாந்தோக்ய உபநிஷத்தில், பாபகர்மாக்கள் பண்ணினவர்கள் எந்த எந்த ஜன்மாக்களை அடைவார்கள் என்று சொல்லும்பொழுது, மற்றப் பிறவிகளுடன், "சண்டாளஜாதி"யில் பிறப்பையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறது.

ஸ்ங்:— மனுஷ்யர்களில் பிறப்பிலேயே பாபமுள்ளவர் உண்டு என்று சொல்வது கொடுமையான கொள்கை, ஹிந்துமதத்துக்கு வெட்கம், என்று காந்தி சொல்கிறாரே?

வை:— சொல்லலாம். ஆனால் வேதம் வேறுவிதமாய்ச் சொல்லுகிறது. ஸ்ரீ பகவத்கீதையிலும் येऽपिस्युः पापयोनयः என்ற வாக்யம் இருப்பதால், பாபஜன்மங்கள் உண்டென்று வெளியாகிறது. வேதத்தை அநுசரித்தமநு, யாக்ஞயவல்க்ய, பராசர முதலிய ஸ்மிருதிகளும் அந்த்யஜர்களைப்பற்றின விசேஷங்கள், வ்ருத்திகள், நியமங்கள் முதலியவைகளை விவரித்துச் சொல்லுகின்றன. ஆகம நூல்களும் அம்மாதிரியேசொல்லுகின்றன. அநாதியான சிஷ்டாசாரமும் அப்படியே இருக்கிறது.

ஸ்ங்:— காந்தி உலகங்கொண்டாடும் மாஹாத்மியம் உள்ளவரல்லவா? நமக்கெல்லாம் ஸாத்யமில்லாத உபவாஸாதி காயக்லேசங்களை ஸஹிக்கிறவரில்லையா? ஸத்யம், அஹிம்ஸை, தயை முதலிய ஆத்ம குணங்கள் நிறைந்தவரில்லையா? நம்மைக்காட்டிலும் எத்தனையோமடங்கு சிரேஷ்டரல்லவா?

வை:— இருந்தால்?

ஸ்ங்:— அந்த மஹானின் புத்தியில் தோன்றுவது பிரமாணமல்லவா? நம்மைக்காட்டிலும் அவர் பெரியவர்தானே?

வை:— பெரியவர்தான். முற்காலங்களிலும் பெரியவர்கள் இருந்திருக்கிறார்கள்; ஸ்ரீ சங்கராசார்யர், ஸ்ரீ ராமாநுஜாசாரியர், ஸ்ரீ மத்வாசாரியர், ஸ்ரீ வித்யாரண்யர், ஸ்ரீ அப்பய்யதீக்ஷிதர் ஸ்ரீ வேதாந்த தேசிகர் முதலானோர்கள்,

ஸங்.—நீர் சொல்லும் பெரியவர்கள் இருந்ததாலென்ன?

வை:— வேதத்தில் சொல்வதை அவர்கள் அங்கீகரித்திருக்கிறார்கள்.

ஸங்:— அவர்களெல்லாம் இவருக்கு ஸாம்யம் ஆவார்களா?

வை:— ஆத்ம குணங்களில் தாழ்ந்தவர்களல்ல. ப்ரமாணங்கள் தெரிந்தவர்கள் என்பதால் மேலானவர்கள்.

ஸங்:— அப்படியாயின்?

வை:— அந்த பெரியார்கள் சொல்வதற்கும், காந்திமஹான் சொல்வதற்கும் வித்யாஸம் இருந்தால், வேதம் சொல்வதை ஒத்துச்சொல்லும் பெரியார்களை நான் பின்பற்றுகிறேன்.

ஸங்:— இதுவரையில் உண்டான மஹான்களுக்கெல்லாம் மேலானவர் மஹாத்மாகாந்தி என்பது எனது கொள்கை.

வை:— இருக்கட்டும்.

ஸங்:— நிஷ்கல்மஷமான அவர் ஹ்ருதயத்தையும், அவருடைய தபஸ் சக்தியையும், தியாகத்தையும், தீரத்தையும், அவர் எல்லா மனுஷ்யர்களிடத்திலும் வைத்திருக்கிற அன்பையும், இதுவரையில் அவர் செய்திருக்கிற தேச ஸேவையையும் தீனஜனோபகாரங்களையும் தெரிந்த நான், முற்காலத்திலும் இக்காலத்திலும் இணையில்லாத மனுஷ்ய ச்ரேஷ்டர் இவர், இவர் சொல்வதே ப்ரமாணம் என்று ஏற்றுக்கொள்வேன்.

வை:— செய்யுங்கள்.

ஸங்.— தாங்களும் ஏற்றுக்கொள்வதில் என்ன சிரமம்?

வை:— முற்காலத்திலும், இக்காலத்திலும் ஸ்ரீகாந்திக்கு ஸமமான சிரேஷ்டரில்லையென்று வைத்துக்கொண்டாலும், இனிமேல் ஒருவர் உண்டாகமாட்டாரென்று நிச்சயமில்லையே?

ஸங்:— உண்டாகமுடியாதென்று நினைக்கக்கூடாதா?

வை:— ஸ்ரீகாந்தியவர்களே அவ்விதம் நினையார்கள். "இமயமலையொத்த பெரும்பிழைகள் செய்துள்ளேன். நான் இப்போது சொல்வதும் பிழையாயிராதென்ற உறுதியில்லை" என்று அவரே சொல்லுகிறார்.

ஸ்:— இன்னும் பெரியமஹான் உண்டாகட்டும். அதனாலென்ன?

வை:— அப்படி உண்டாகும் மஹான் ஸ்ரீ காந்தி சொல்வதிலிருந்து வேறாகச் சொன்னால்?

ஸ்:— அதை அப்பொழுது ப்ரமாணமாக ஏற்றுக்கொள்வோமே!

வை:— அவ்விதம் மாறக்கூடியது ப்ரமாணமாகாது.

ஸ்:— ஏன் ?

வை:— முக்காலத்திலும் உறுதியாய் ஒருவிதமாய் நிற்பதே ப்ரமாணம்.

ஸ்:— அவ்வித ப்ரமாணம் எது?

வை:—ஒரு புருஷனிடமிருந்து உதிக்காத, ஸ்வயம்ப்ரமாணமாகிய வேதம்.

ஸ்:— அவ்விதம் நான் அங்கீகரிக்கவில்லையென்றால்?

வை:— தங்கள் இஷ்டம்.

ஸ்:— நீங்களும் என்னைப்போல் ஏன் ஒப்புக்கொள்ளக்கூடாது?

வை:— நாங்கள் வேதசரணர்கள், ப்ரமாணசரணர்கள். அதனால் முடியவில்லை.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

கஷ்டப்படுவோரைக் கண்டு களிக்காதே.

1. காண்டவ வநம் தீப்பற்றி எறிந்ததல்லவா? அங்கு மயன் என்பவன் அகப்பட்டுக்கொண்டான். அவனை அர்ஜுனன் காப்பாற்றினான். இந்த உபகாரத்தை மயன் மறக்கவில்லை. நன்றி மறப்பது பாபமல்லவா? அர்ஜுனனை வணங்கினான். தேவதச்சனையான் உமக்கு என்ன உதவிசெய்யலாமென்றான். அர்ஜுனன் கிருஷ்ணனை நோக்கினான்.

2. அவருக்கு எது பிரியமோ அதுதான் எனக்குப் பிரியம் ஏன்? அவர் உதவியாலல்லவா அவன் நன்மைபெற்றான். கிருஷ்ணனோ பரோபகாரத்திற்காகவே அவதரித்தவர். அவருக்குத் தனக்கென ஒன்றும் வேண்டுவதில்லை. பாண்டவர்களுக்கு ஓர் அழகிய மாளிகை கட்டச்சொன்னார். மாயையால் மயன் அப்படியே செய்தான்.

3. அந்த அரண்மனை வெகு அழகானது. அதற்கீடு எங்குமில்லை. நாரதர் அங்கு வந்தார். அதன் பெருமையைத் தர்மர் நாரதரிடம் கூறினர். தர்மருக்குள்ள கர்வத்தை நாரதர் அடக்க ஆசைகொண்டார். தேவ ஸபைகளின் சிறப்பை வர்ணித்தார். இதைவிட மேலான ஸபைகளைக் கேட்டு தர்மர் எண்ணம் மாறிற்று.

4. ராஜ ஸூய யாகம் செய்யும்படி நாரதர் கூறினர். கிருஷ்ணர் சகாயத்தால் பாண்டவர் திக்விஜயம் செய்தனர். ஏராளமான தனத்தைக் கொண்டுவந்தனர். ராஜஸூயயாகம் நன்ருகநடந்தது. உலகிலுள்ள எல்லோரும் வந்திருந்தனர். துர்யோதனன் முதலியவர்களும் வந்தனர். அவரவருக்கேற்ற வேலை கொடுக்கப்பட்டது.

5. யாகம் பூர்த்தியாயிற்று. வந்தவர் எல்லோரும் சென்றனர். துர்யோதனன் பாண்டவர் மாளிகையைச் சுற்றிப் பார்த்தான். அங்கு ஓரிடம் ஜலம்போலிருந்தது. அதைக் கண்டு துர்யோதனன் துணிகளைஜாக்கிரதையாகத்தூக்கிப்பிடித்துக்கொண்டு போனுன். அங்கு ஜலமில்லை. மற்ருேரிடத்தில் தாராளமாக நடந்தான். அங்கு ஜலமிருந்தது.

6. ஜலத்தில் விழுந்து துணிகள் நனைந்தன. கதவுபோல் ஓரிடமிருந்தது. அங்கு கையை வைத்துத் தடவிப் பார்த்தான். அது கதவில்லை. மற்ருேரிடம் ஒன்றுமில்லாததுபோலிருந்தது. வேகமாகச் சென்ருன். கதவு நெற்றியில் இடித்தது. இதைக் கண்டு பீமனும் திரௌபதியும் சிரித்தார்கள். திருதராஷ்டரன் பிள்ளை என்ருர்கள்.

7. திருதராஷ்டரனுக்குக் கண்ணில்லையல்லவா! அவன் பிள்ளைகளுக்கும் கண்ணில்லையோ என்று அதன் கருத்து. துர்யோதனன் பிறவியிலேயே துர்க்குணமுள்ளவன். வணங்காமுடி மன்னன். கர்வமுள்ளவன். இதைப் பொறுப்பானு? அவனுக்கு அஸாத்ய கோபமுண்டாயிற்று. ராஜசூயத்தில் நடந்தசிறப்பையுங் கண்டான்.

8. அடங்காத அசூயைகொண்டான். எப்படியேனும் பாண்டவரைக் கொல்வது அல்லது அவர் ராஜ்பத்தைப் பிடுங்கிக் கொள்வது எனத் தீர்மானித்தான். அவனுக்கேற்ற மாமா சகுனி

அவரைக் கலந்து யோசித்தான். அவர் பாண்டவர்களைச் சக்தியால் வெல்லமுடியாது என்றார்.

9. யுக்தியால் அவர்களை ஜயிக்கத் தீர்மானித்தனர். திருதராஷ்டரனையும் கலந்தனர். புதியதோர் அரண்மனை கட்டினர். அங்கு சூதாடவரும்படி பாண்டவரை வேண்டினர். சூதாடுவதில் சகுனிகெட்டிக்காரன். அவனைவெல்ல எவனாலும் முடியாது. அன்றியும் சகுனி மிகக் கபடமுள்ளவன். வஞ்சகன்.

10. அவனுடன் சூதாடுவது உசிதமல்ல என தர்மர் அறிவர். ஆயினும் ஒருவர் அழைத்தால் முடியாதென அவர் சொல்வதில்லை. சூதாடவந்தார். அவர் சொத்துகளைச் சகுனி கபடமாக அபஹரித்தான். திரௌபதியையும் சபைக்கு இழுத்துவந்தான். துணிகளை அவிழ்த்து மானபங்கம் செய்தான்.

11. பாண்டவர்களைக் காட்டிற்குத் துரத்தினன். பாண்டவருக்கு வந்த தீங்கு எதனால்? கீழ்விழுந்தோரைக்கண்டு நகைத்ததாலன்றோ?

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவ சர்மா.

வாரவிருத்தாந்தம்.

வருக ! வருக !! 28உ சென்னைக்கோர் சிறந்த பாக்ய தினம் எனலாம். எங்கும் ஒரே ஜனத்திரள் ! எங்கும் ஒரே பேச்சு ! எங்கும் வாழை மாவிலை தோரணம் ! எங்கும் பூர்ணகும்பம் ! என்றும் காணாத் திருநாள். எங்கும் ஒரே உத்ஸாஹம்! எங்கும் ஒரே ஆனந்தம் ! இரவு 8-15க்கு ப்ரபோதச் சந்திரன் உதயமானது! சென்னை ஆஸ்திகர்களின் புண்யம் ஒன்றாக உருண்டு திரண்டு உருவெடுத்து வந்தது !! பல நாளாகப் பார்த்திருந்த பாக்யம் பழுத்துவந்தது ! ஆனந்தக் கடல் அன்புடன் எழுந்து வந்தது! கல்விக்கடல் கரைபுரண்டு வந்தது ! கைலாஸநாதனே கண்கூடாக எழுந்தருளினன் ! நமது பரமாசார்யாளின் பாததூளி பட்டணத்தைப் பாவனமாக்கியது! அன்பர் உள்ளம் குளிர்ந்தது ! அதர்மம் அகன்றது ! தர்மம் தழைத்தது ! ஈசனே வருக ! உள்ளக்கோயிலுருவெடுத்தாடும் என் குருமூர்த்தியே வருக ! வருக !! நின் சரணம் வாழ்க !!!

யார் காரணம்? ஸ்ரீஜகத்குரு இங்கு வருவதற்கு முன் ஆஸ்திக உலகைக் கலக்க ஓர் ஹாலாஹலம் இங்கும் பரவி நின்றது. பக்தர் பலர் இதுகாரணம்பற்றி ஸ்ரீ குருமூர்த்தி விஜயம் விளம்பமாமோ என அஞ்சினர். உலகெல்லாம் படைத்து பாலித்து தன்னுள்ளே அடக்கிக்கொள்ளும் பரசிவனோ இதற்கஞ்சுபவன்? பல்லக்கிலமர்ந்த குருமூர்த்தி எதிரேஎம்பிரானை அழைத்து நிறுத்தி எல்லோருக்கும் நன்மைப் புகலவேண்டுமெனக் கூறியதுபோல் அங்கிங்கிசையாதிருந்தனர். யாதொரு இடையூறுமின்றி மிக மிகச் சாந்தமாக கோலாஹலத்துடன் ஸ்ரீமதாசார்ய விஜயம் எல்லோரையும் அகமகிழ்ச்சி செய்தது. ஸ்ரீபரமாசார்யாளது பாத தூளியின் மஹிமையே இதற்குக் காரணம்.

சிறந்த வரவேற்பு!! சென்னை என்னும் காணுக்கண்காக்ஷியை இப்போது கண்டது. மதபேதமின்றி மிகச் சிறந்த வகையில் குருவை வரவேற்றது. வைதிகர்கள் மிக உத்ஸாஹங்கொண்டு பல கக்ஷிகளாக நின்று வேதபாராயணம் செய்தனர். அகாலமாகியும் கூட்டம் குறையாது ஆனந்தங்கொண்டது. வாத்யகோஷமும் வேதபாராயணமும் மிகச் சிறப்பாகக் காணப்பட்டன. எல்லாவற்றையும் விட ப்ரஸந்ந முகத்துடன் ஏகாக்ர திருஷ்டியாயுள்ள எமது குருவின் முகாரவிந்தமோ எல்லோருள்ளத்தையும் இழுத்தது.

அமிர்தமொழி! சென்னை மைலை ஸம்ஸ்கிருத கலாசாலை ஸ்ரீபரமாசார்யாளுக்குத் தங்குவதற்கேற்றபடி ஸகல ஏற்பாடுகளுடன் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. ஊர்வலம் முடிந்து ஆங்கு எழுந்தருளிய ஸ்ரீஜகத்குருவுக்குத் தத்கால வழக்கப்படி வடமொழியில் மூன்றும் தெலுங்கில் ஒன்றும் தமிழில் ஒன்றுமாக ஐந்து வரவேற்புப் பத்திரங்கள் படித்துக்கொடுக்கப்பட்டன. அன்று பரமாசார்யாள் ஸ்ரீகபாலியின் மஹிமையைப்பற்றியும் மறுநாள் "ஸ்வஸ்திப்ரஜாப்ய:" எல்லோரும் சுகமாயிருக்கவேண்டுமென்பதுபற்றி மிக ருசியாகவும் உருக்கமாகவும் கம்பீரமாகவும் கல்மனமும் கரையும்படியும் உபன்யஸித்தார்கள். அவ்வமிருதத்தைப் பருகினோர் பேரானந்தமடைந்தனர். மூன்றும்நாள் ஸ்ரீபகவத்பாதாளின் கார்யத்தைக்குறித்து ஓர் உருக்கமான உபன்யாஸம் நடந்தது.

லக்ஷத்திலொருவர். லக்ஷத்தில் ஒருவரே பகவானை உணர்பவர். பகவான் தர்மரூபி. 30உ பம்பாயில் ஓர் கூட்டம்

கூடிற்று. ஆலயம்முதலாக எல்லா தர்ம ஸ்தாபநங்களையும் சண்டாளருக்கு விடவேண்டுமென ஓர் தீர்மானம் செய்யப்பட்டது. மதவிருத்தமான இதை ஒரு மஹநீயன் கண்டித்தார். உலகெலாம் ஒன்றாகத்திரண்டுவந்தாலும் அஞ்சாது தர்மத்தைக் கூற ஒருவன் இருப்பான் என இது காண்பிக்கிறது. இவரது தைர்யத்தையும் மதாபிமானத்தையும் கண்டு மகிழ்கிறோம்.

நல்ல பதில். 30வ திருவாங்கூர் ராஜா ஸ்ரீமான் காந்திக்கு ஓர் தந்தியடித்தார். போதுமானபடி நன்கு யோசிக்காமல் பண்டைய ஸதாசாரத்தை மீறமுடியாதெனக் கூறினர். இவ்வழகிய பதிலை ஆமோதிக்கிறோம்.

பண்டித ஸம்மாநம். 25வ நாகை ஹிந்து மதாபிமான சங்கம் பிரும்மஸ்ரீ தேதியூர் சுப்ரமண்ய சாஸ்திரிகளுக்கு "வேதாந்த தத்வ மஹோபதேசகர்" என பட்டமளித்தது. 1வ தமிழ் வித்வான் பரீக்ஷையில் தேறிய ஒருவருக்குத் திருப்பனந்தாள் மடாதிபதி ஆயிரம் ரூபாய் ஸம்மாநம்செய்தார். பண்டிதர்களைப் பூஜித்தல் மிக உத்தமமான தர்மம். அவர்களுக்குத் தக்க ஸம்மாநம் செய்து அவர்கள் மூலம் தர்மப்ரசாரம் செய்விப்பது தனிகர் கடமையாம்.

அன்ன தாநமும் வஸ்த்ர தாநமும்! 28வ ஸ்ரீபகவத்பாதாள் சென்னைக்கு விஜயம் செய்ததின் நிமித்தம் மைலை வரவேற்பு சங்கத்தார் எண்ணிறந்த ஏழைகளுக்கு அன்னதானம் செய்தனர். பரம ஏழைகளுக்கு வஸ்த்ரதானம் செய்யவும் தீர்மானித்திருக்கின்றனர். காலோசிதமான இந்த தர்மத்தைச் செய்த விவேகிகள் ஸ்ரீ பரமாசாரியாளின் கடாக்ஷாநுக்ரஹத்திற்குப்பாத்ரமாவர்.

ஜீவனுள்ள ஸபை. 1வ தஞ்சை ஸநாதனதர்மஸபை தஞ்சையில் ஓர் ஸபை கூட்டி அதர்மவகையில் உண்ணாவிருதங்கொள்பவரைக் கண்டித்து அதர்மத்திற்கு இடங்கொடாத மன்னரைப் போற்றி பல தீர்மானம் செய்தது. இதனாலுண்டாகும் பயன் எத்தகையதாயினும் அந்தந்த காலத்திற்குறிய கடமையைச் செய்யும்படி ஷெ ஸபையைப் போற்றாமலிருப்பதற்கில்லை. பேரோடு மாத்ரமிருக்கும் ஸபைகளைப்போலில்லாது தான் ஜீவனுடனிருப்பைக் காட்டுமிது ஏனையவைகளுக்குப் பாடங்கற்பிக்கிறது.

வே. ஸோமதேவ சர்மா.